# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2003, ஒற்றோபர் மாதம் 23 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 7.75** **தபாற் செலவு: ரூபா 4.50**

## 2003 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஒ. 14/99
4538

## 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :-

"அதிகார சபையின் உறுப்பினர்கள்.

4. அதிகாரசபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) 8அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் தவிசாளர் ;

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் பெயர்குறித்த நியமன உறுப்பினர்கள் :-

(i) தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தேயிலைச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சபையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சபையின் பிரதிநிதியொருவர் ;

2 – H 019147 – 1,250 (2003/07)

(ii) *1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேயிலை ஆராய்ச்சிச் சபையால் பேணப்படுவதும் நிர்வகிக்கப்படுவதுமான தேயிலை ஆராயச்சி நிறுவகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர்* ;

(iii) *1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகப் பதிவுசெய்யப்பட்ட தனியார் தேயிலைத் தொழிற்சாலைச் சொந்தக்காரர் கழகத்தின் தவிசாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் அல்லது இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன், அவரின் பிரதிநிதியொருவர்* ;

(iv) *இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனத்தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர்* ;

(v) *பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டளைகள் மீது தெரிவுசெய்யப்படவேண்டிய தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் இருவர்* ;

இவ்வுட்பந்தியின் நோக்கங்களுக்காக "தொழிற்சங்கம்" என்பது (138 ஆம் அத்தியாயமான) தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(vi) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளிருவர் ;

(vii) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதியொருவர் ;

(viii) (அத்தியாயம் 291) இலங்கைத் தோட்டத்துரைமார் சங்கக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தோட்டத்துரைமார் சங்கத்தின் பிரதிநிதியொருவர், இவர் அச்சங்கத்தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் பெயர்குறித்து நியமிக்கப்படுவார்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது "மூன்றாகும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஐந்தாகும்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள "உறுப்பினர் ஒவ்வொருவரும்", என்ற சொற்களுக்குப் பதிலாக, "நான்காம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும்", என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2) (அ) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், குறித்தளிக்கப்படும் காரணங்களுக்காக -

(i) 4 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (vi) ஆம் உட்பந்தியின்கீழ் அதிகாரசபைக் குப் பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினரொருவர் தவிர்ந்த எவரேனும் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம் ;

(ii) 4 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (vi) ஆம் உட்பந்தியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினரொருவரைப் பெயர்குறித்து நியமித்த இயைபான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அத்தகைய உறுப்பினரை அகற்றலாம்.

(ஆ) எந்த உறுப்பினர் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த உறுப்பினர் ஒருவர், அக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்."

(2) அப்பிரிவின் (1) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளில் "உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "நாலாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (v) என்னும் உட்பந்தியின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்,

**6**. எட்டாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :– *முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

"*தவிசாளரின் நியமனம்.* 8அ. அமைச்சரால் நியமிக்கப்படும் அதிகார சபையின் தவிசாளரொருவர் இருத்தல் வேண்டும்.".

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(i) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை (எ) என்னும் பந்தியாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(ii) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ஈ) தேயிலைச் சிறுபற்றுநிலங்களில் முதலீடு செய்வதை ஊக்குவித்தல் ;

(உ) தரவுகளைச் சேகரித்தலும் பரப்புதலும் அத்துடன் தேயிலைச் சிறுபற்றுநிலங்களின் உள்ளார்ந்த அபிவிருத்தி ஆற்றலை நிச்சயப்படுத்துதலும் ;

(ஊ) தகுந்த கொள்கைகள்மீது அமைச்சுக்கு ஆலோசனை வழங்குவதும் ஏனைய இயைபான முகவர் நிலையங்களுடன் இணைப்பை ஏற்படுத்துதலும்.".

**8**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் நேர்முந்திய நாளன்று பதவி வகித்துவரும் அதிகாரசபையின் உறுப்பினர்கள், இச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சபையானது மீள அமைத்துருவாக்கப்படும் வரையிலான காலத்திற்குத் தொடர்ந்தும் பதவி வகித்து வருதல் வேண்டும். *நிலைபெயர் கால ஏற்பாடு.*

**9**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்